www.malankaralibrary.com

# என் தேடல்கள்

ஜெர்மனியில் என் பணிகள் 2012ஆம் ஆண்டு மேய் மாதம் முதல் ஆரம்ரமாகி ஒன்பது ஆண்டுகளாக இப்பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த கால பணிகளை பற்றி சிந்திக்கின்ற போது வெற்றிகளும் சவால்களும் இன்னல்களும் நிறைந்ததாக இருந்தாலும் பலவற்றை திருச்சபைக்காக என்னால் செய்ய முடிந்தது என்பதை எண்ணி ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இவற்றைச் செய்ய இறைவன் என்னைப் பயன்படுத்தினார். இப்பணிகள் யாவும் நிறைவுற்றவை என் அறிவாலும் திறமையாலும் அல்ல. ஆண்டவரின் அருளினால் மட்டுமே ஆகும். இதுவே என் உறுதியான விசுவாசம்.

குருத்துவப் பணி வாழ்வின் முதல் பத்தாண்டு கால ஆயர் இல்ல பணிகளுக்குப் பின்னர் பங்கிலே தங்கி பங்கு மக்களுக்காக பணிபுரிய கிடைத்த வாய்ப்பை மிக மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருந்தேன். அவ்வாறு முன்ஸ்டர் என்னும் மறைமாவட்டத்தில் நெதர்லாந்துக்கு எல்லைக்கு அருகே கிளேவே என்னும் இடத்தில் என் பங்குப் பணிகள் ஆரம்பமாகின.

எல்லாமே புதிதாக அமைந்திருந்தது. கலாச்சாரம், பண்பாடு, நடைமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் எல்லாமே வித்தியாசமானதாகவும் நம் கலாச்சாரத்தில் இருந்து வேறுபட்டதாகும் அமைந்திருந்ததால் எனக்கு உதவி புரிவதற்காக ஏரிக் மற்றும் பிரிஜிற்றே எந்த ஆசிரிய தம்பதியினர் தயாராக முன்வந்தனர். முக்கிய சவாலாக தொடக்க்க காலத்தில் அமைந்திருந்தது உணவு சமைப்பது என்பதாகும். 9 ஆண்டு கால வாழ்விலும் இந்நாள் வரையிலும் சுவை மிகுந்த உணவை சமைக்க என்னால் கற்றுக் கொள்ள முடியவில்லை. சுவை மிகுந்த உணவு சமைக்க வேண்டும் என்ற ஆர்வமும் வரவில்லை. ஆனால் அங்கேலிக்கா என்ற நபர் என்னுடைய பரிதாபமான சூழ்நிலையை உணர்ந்தவாறு அடிக்கடி தனது வீட்டிற்கு என்னை அழைத்து சுவை மிகுந்த உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். அப்படியே வாழ்வு கடந்து போய்க்கொண்டிருந்தது.

ஜெர்மனியில் பணிகள் எனப்படுபவை முற்றிலும் வேறுபட்ட நிலை ஆகும். பங்கு அலுவலக செயலர் வழியாகவே அனைத்து நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. குருக்கள் திருவழிபாட்டு நிகழ்வுகளை மட்டுமே கவனிக்க வேண்டும். மற்றுப் பணிகளை அலவலகச் செயலர் மேற்கொள்வார்.

எல்லா நாள்களிலும் திருப்பலி காணப்படும். வாரத்துக்கு ஒன்று அல்லது இரண்டு அடக்கச் சடங்குகள் நடத்த வேண்டியிருக்கும். மாதத்திற்கு இருமுறை திருமுழுக்குகள் நடத்த வேண்டியிருக்கும். மேலும் திருமணங்கள் மற்றும் திருமண ஜுபிலி விழாக்கள் பல்வேறு இயக்கங்களின் கூட்டங்கள் போன்றவற்றையும் அடிக்கடி முன்னின்று நடத்த வேண்டும்.

தினந்தோறும் திருப்பலி ஒப்புக்கொடுக்க செல்கின்ற போது அன்றைய திருவிவிலியப் பகுதியை மையமாகக் கொண்டு முன்னுரை ஒன்றை திருப்பலிக்கு முன்னதாக நடத்தவேண்டும். இதன் தயாரிப்புக்காக அதிக நேரம் செலவிட வேண்டிய தருணம் ஏற்படும்.

ஞாயிற்றுக்கிழமை திருப்பலியின் போது மறையுரைகளை சுருங்கிய நேரத்தில் அரிய கருத்துகளை எளிய நடையில் போதிக்க வேண்டும். இதற்காக இணையதளத்திலிருந்தும் நூலகத்திலிருந்தும் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளில் இருந்தும் பல கருத்துக்களை தேடி கண்டுபிடித்து தேர்ந்தெடுக்க

www.malankaralibrary.com

வேண்டும். இவ்வாறு தயாரிக்கின்ற மறையுரைகள் மொழி திருத்தம் செய்யக் கூடிய ஆசிரியரிடம் காட்டி அதனை திருத்தம் செய்து பின்னர் மட்டுமே எழுதப்பட்ட மறையுரைகளை வழங்க வேண்டும். எழுதப்படாத மறையுரைகளை தயாரிப்பின்றி நடத்தப்படும் மறையரையாகக் கருதுவர். திருமண விழாக்கள், ஜூபிலி விழாக்கள் மற்றும் அடக்க சடங்குகள் நடைபெறுகின்ற போதும் இவ்வாறே மறையுரைகளை தயாரிக்க வேண்டும்.

அடக்க திருச்சடங்கு நிகழ்வுகள் ஜெர்மனியில் சற்று வித்தியாசமாக நடத்தப்படும். நம்மூரைப் போன்று இறந்த ஓரிரு நாட்களில் இறந்தவரை அடக்கம் செய்வது இல்லை. குறைந்தது ஐந்து நாட்களுக்கு பின்னர் தான் இறுதிச் சடங்குகளை நிகழ்த்துவர். நமது பங்கில் உள்ள ஒரு நபர் இறந்தார் என்றால் அவருடைய வீட்டு முகவரியும் தொலைபேசி தொடர்பு எண்ணும் அலுவலகத்திலிருந்து வழங்குவர். குடும்பத்தினரை தொடர்பு கொண்டு இறந்த நபரை பற்றிய கருத்துக்களை அவர்களிடமிருந்து சேகரிக்க வேண்டும். இந்த அமர்வு 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை நடைபெறலாம். சில நேரங்களிலும் இறந்தவரின் அனைத்து பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அமர்ந்து இறந்தவரைப் பற்றிய நற்காரியங்களை எடுத்தியம்புவர். இவ்வாறு நாம் சேகரித்த இறந்தவரின் வாழ்க்கை நிகழ்வுகளை இணைத்து மறையுரைகளை நாம் தயாரிக்க வேண்டும். திருமணம், திருமுழுக்கு மற்றும் ஜூபிலி விழாக்கள் நடத்துவதாக இருந்தாலும் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று இத்தகைய அமர்வு ஒன்றை வழிநடத்த வேண்டும்.

சில இயக்கங்களின் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்படும். அழற்றின் வாராந்திர கூட்டங்களில் நாம் பங்கெடுக்கவும் கூட்டங்களின் மத்தியில் ஆன்மீக உரை நிகழ்த்தவும் வேண்டும்.

மேலும் பங்குகளில் பங்குத் தந்தையும் அவரோடு சேர்ந்து ஆன்மீகப் பணி செய்வதற்காக இணைக்குருக்களும், இறையியல் கற்ற வேதியர்களும், இறையியல் கற்ற திருத்தொண்டர்களும் இருப்பர்.

பங்கின் பல்வேறு சொத்து மற்றும் நிர்வாகம் போன்றவற்றை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களாலான பங்குப் பேரவை பங்குத்தந்தையின் தலைமையில் நடத்தப்படும். பங்குத்தந்தையின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களாலான திருப்பணிப் பேரவை ஒன்றும் உண்டு. இவர்கள் பங்கின் முக்கிய திருப்பணிகளை இவர்கள் ஒழுங்கு செய்வர். இத்தகைய குழுக்களின் கூட்டங்கள் மாதத்திற்கு ஒருமுறை நடைபெறுகின்ற போது நாமும் அதனில் பங்குபெற வேண்டும்.

மேலும் இவை தவிர வீடுகளிலிருந்து அழைப்பு வருகின்ற போது உடனடியாக சென்று நோயில் பூசுதல், நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குதல் மற்றும் வீடு ஆசீர்வாதம் போன்ற நிகழ்வுகளையும் செய்ய வேண்டும். அஃதுடன் ஒரு வார காலம் முழுவதும் மருத்துவமனையில் இருந்து எப்போது அழைப்பு வந்தாலும் சென்று நோயில் பூசுதல் கொடுப்பதற்கான பணியினை கட்டாயமாக செய்தாக வேண்டும். ஒரு சில வேளைகளில் இரவு ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரத்திலும் இத்தகைய பணிக்கான அழைப்புகள் வந்ததுண்டு.

இத்தகைய பல்வேறு நிர்வாகச் சீரமைப்புடன் செய்ய வேண்டிய பணிகளுக்கு மத்தியில் மலங்கரை திருச்சபையைச் சார்ந்த ஒரு சில பணிகளை செய்வதை வழக்கமாக்கிக் கொண்டேன். இதற்காக பல்வேறு திருச்சபையைச் சார்ந்த நூல்களை வாசிக்கவும் இணைய தளத்திலிருந்து பல்வேறு புதிய

www.malankaralibrary.com

கருத்துக்களை சேகரிக்கவும் ஆரம்பித்தேன். ஒவ்வொரு முறை விடுமுறைக்கு வருகின்ற போதும் திருச்சபை சார்ந்த தமிழ் மற்றும் மலையாள நூல்களையும் மலங்கரை திருச்சபை சார்ந்த நூல்களையும் கொண்டு வந்து அவற்றிலிருந்து திருச்சபை அறிவை அதிமாக பெற்றுக்கொள்ள முனைந்தேன். இறையியல் முதுகலை பட்டத்திற்கான பயிற்சியில் சேர்ந்து அனைத்து பாடப் புத்தகங்களையும் வாங்கி வாசிக்க ஆரம்பித்தேன். 100க்கும் மேற்பட்ட இணையவழிக் படிப்புகளையும் கற்க முடிந்தது. நான் கற்றறிந்தவை பற்றி பிறருக்கும் எடுத்துக் கூற வேண்டும் என்பதை என் நோக்கமாகக் கொண்டு எழுத்துப் பணியில் அதிக ஆர்வம் காட்டும் நிலை ஏற்பட்டது.

காகிதத்தில் எழுதி வைத்து மீண்டும் அதனை தட்டச்சு செய்வது என்பது அதிகம் நேரம் செலவாகக் கூடிய ஒன்றாக இருந்ததனால் காகிதத்தில் எழுதுவதை விட மனதில் தோன்றுகின்ற எண்ணங்களை தட்டச்சு செய்வதை வழக்கமாக்கிக் கொண்டேன். ஜெர்மனியில் இதற்கான மென்பொருள்கள் மிகவும் விலை உயர்ந்தவையாக வாங்கக் கிடைக்கின்றன. இவற்றை திருச்சபை பணிகளுக்காக வாங்கி பயன்படுத்த ஆரம்பித்தேன்.

முதலாவதாக எனது வகுப்புத் தோழர் ஒருவர் அவர் தயாரித்த ஓரிரு வார்த்தை விடைகளுக்கான ஒரு நூலை மலையாள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்து வெளியிடுவதற்காக ஆரம்பித்தேன். இந்நிகழ்வுக்கு உறுதுணையாக இருந்தவர் அருட்தந்தை ஜெரோம் அவர்கள் ஆவார். நற்கருத்துக்களை வழங்கி தளர்ந்த போதெல்லாம் ஊக்கமூட்டி ஆர்வம் காட்டிய அவரது மனத்தை நன்றியால் புகழ்கிறேன். தொடர்ந்து இந்த மொழிபெயர்ப்பு புத்தகமான „அறிவோம் திருச்சபையை“ என்ற நூலானது 2014ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

ஜெர்மன் மொழியை சார்ந்த திருப்பலிப் பாடல்கள் அனைத்தும் யூடியூப் அலைவரிசையில் இருந்து அவற்றின் இசையை கற்க ஆரம்பித்தேன். அப்போது நம் திருவழிபாட்டுப் பாடல்களையும் இவ்வாறு பிறர் பயனடையுமாறு செய்யலாமே என்ற எண்ணம் என் மனதில் உதித்தது. ஒலி வடிவில் அமைந்திருந்த நம் திருவழிபாட்டுப் பாடல்கள் அனைத்தையும் பல்வேறு பூக்கள் மற்றும் இயற்கை காட்சிகளை பின்னணியாக கொடுத்து, பாடல்கள் வார்த்தைகளை கண்டு பாடி ஜெபிக்க கூடிய விதத்தில் வீடியோவாக வடிவமைக்கும் பணியை ஆரம்பித்தேன். தற்போது சிறிய மற்றும் பெரிய வீடியோக்களாக 150க்கும் மேற்பட்ட வீடியோக்கள் Tamil Malankara Liturgical Commision என்ற யூடியூப் அலைவரிசையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து நம் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் பவுலோஸ் ஆயர் அவர்களின் வெள்ளி விழாவை முன்னிட்டு அவர் வெளியிட்ட „இருகரம் கூப்பி“ என்ற ஒலிப்பேழையில் உள்ள அனைத்து பாடல்களையும், அவரது திருப்பலியின் ஒலிவடிவத்தையும் அவரது அனுமதியுடன் மேற்குறிப்பிட்ட முறையிலேயே ஒழுங்குபடுத்தி யூடியூப் அலைவரிசையில் பதிவேற்றம் செய்ய முடிந்தது. மறைமாவட்டத்தில் முதன் முதலாக அருட்தந்தை பத்ரோஸ் அவர்கள் வெளியிட்டிருந்த „நான் வாழ“ ஒலிப்பேழைப் பாடல்களையும் இம்முறையில் பதிவேற்றம் செய்ய முடிந்தது.

அருட்தந்தை மரிய அற்புதம் அவர்களுடைய தென்னகத்தின் விடிவெள்ளி என்ற நூலானது மறைக்கல்வி ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு துணை நூலாக பயன்படுத்தப்பட்டு வந்தது. அவரது அனுமதியுடன் இந்நூலை மறு

www.malankaralibrary.com

சீர்படுத்தி மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் அதில் அடங்கியிருக்கும் கூடிய 10 பாடங்களையும் MTM Maraikkalvi என்ற யூடியூப் அலைவரிசையில் பதிவேற்றம் செய்ய முடிந்தது.

ஏற்கனவே நான் வெளியிட்ட அறிவோம் திருச்சபையை என்ற நூல் முழுமையற்றதாக உள்ளது என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இம்முறை மொழிபெயர்ப்பாக அல்ல நானே திருச்சபை சார்ந்த கருத்துக்களை பல்வேறு நூல்களில் இருந்தும் திருவிவிலியத்தில் இருந்தும் இணையதளங்களில் இருந்தும் வாசித்து தேடிக் கண்டுபிடித்து „திருச்சபைச் சுவடுகள்" என்ற ஓரிரு வார்த்தை வினா விடைகளாக ஒரு நூலை வடிவமைக்க முடிந்தது. அதிர்ஷ்டவசமாக நம் உயர் பேராயர் கர்தினால் பசேலியோஸ் கிளீமீஸ் அவர்கள் இந்நூலை வெளியிட்டார் என்பது எனக்கு மிக்க மகிழ்ச்சி.

„திருச்சபைச் சுவடுகள்" என்ற நூலை மையப்படுத்தி தமிழக மலங்கரை மக்களுக்காக வினா விடை போட்டி ஒன்றை இணையதளம் வழியாக நடத்தப்பட்டது. ஏறக்குறைய 200 நபர்கள் பங்கேற்று 80 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் 90 சதவீத மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுக் கொண்டனர் என்பது நம் மலங்கரை மக்களின் திருச்சபை சார்ந்த அறிவும் ஆர்வமும் வியக்க வைத்தது.

மலங்கரை இசையில் சிலுவைப்பாதைப் பாடலை வடிவமைத்து அருட்சகோதரி செலினா கிரேஸ் உதவியுடன் பேராலய பங்குப் பாடகர்களால் பாடவைத்து யூடியூப் அலைவரிசையில் பதிவேற்றம் செய்தபோது எதிர்பார்த்ததை விட நல்ல ஒத்துழைப்பு இணையதளத்தில் கிடைத்ததை எண்ணி மகிழ முடிந்தது.

தொடர்ந்து மறைக்கல்வி பாடங்களை எளிதில் புரிந்து கொள்வதற்கு உதவியாக பல வகுப்புகளின் பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ள கேள்வி விடைகளையும் ஓரிரு வார்த்தை வினா விடைகளையும் தயாரித்து இணையதளத்தில் PDF வடிவில் வெளியிட்டதற்கு மறைக்கல்வி மாணவர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது.

மேலும் மறைக்கல்வி பாடங்களை இணையதளம் வாயிலாக வார்த்தைகளை கண்டு கேட்டு எளிதில் கற்றுக்கொள்ள வசதியாக MTM Maraikkalvi என்ற மறைக்கல்வியின் அலைவரிசையில் ஏறக்குறைய 150 க்கும் மேற்பட்ட வீடியோக்களை உருவாக்கி பதிவேற்றம் செய்ய இயன்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட அருட்தந்தையர்களும், மறைமாவட்ட பங்குகள் மற்றும் சென்னை, கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் நீலகிரி போன்ற பகுதிகளில் இருந்தும் வாழும் தமிழக மலங்கரை மக்கள் இப்பாடங்களின் ஒளி வடிவங்களை அனுப்பி உதவி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டு பாடல்களின் இசையில் அருள்நிறை மரியே ஜெபத்தையும் திருப்புகழ்மாலையையும் வடிவமைத்து கிராத்தூர் பங்குப் பாடகர்களால் பாடி அதனை யூடியூப் அலைவரிசையில் பதிவேற்றம் செய்யவும் முடிந்தது.

கொரோணாவின் தீவிர பாதிப்புக் காலத்தில் ஒரு சில பங்குகளில் திருவிவிலியத்தில் உள்ள வார்த்தைகளின் கோடிட்ட இடங்களை நிரப்புதல் என்னும் விளையாட்டு நடத்தப்பட்டு வந்தது. அதற்காக திருவிவிலியத்தின் அனைத்து நூல்களிலிருந்தும் சராசரி 100 கோடிட்ட இடங்களுக்கான

www.malankaralibrary.com

வினாக்களை தயாரித்து பிடிஎப் வடிவில் சேமித்து வைத்துள்ளேன். இப்போதும் சில பங்குகளில் இவை தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளன. பின்னர் இத்தொகுப்பை நூலாக வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மார்த்தாண்டம் மறைமாவட்ட திருவிவிலிய பணிக்குழுவின் சார்பாக வாரம்தோறும் நடத்தப்படும் திருவிவிலியத்தின் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கும் மற்றும் கோடிட்ட இடங்களை நிரப்புதல் எக்சோடஸ் என்ற போட்டியிலும் இணைந்து செயலாற்ற முடிகிறது.

திருவழிபாட்டில் பயன்பாட்டிலுள்ள பிறமொழிச் சொற்கள் பலவற்றையும் தொகுத்து அவற்றின் அர்த்தங்களையும் திருப்பலி மற்றும் திருவழிபாட்டு நிகழ்வுகளில்d நாம் பயன்படுத்தக்கூடிய சுறியானிச் செபங்களையும் „மலங்கரையின் பிறமொழி சொற்கள்" என்ற பெயரில் ஒரு தொகுப்பு நூலாக கடந்த ஆகஸ்ட் நான்காம் நாளில் தூய மரிய வியானி தினத்தன்று வெளியிட முடிந்தது.

ஐரோப்பாவில் பல்வேறு திருத்தலங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்ள முடிந்தது. இத்தகைய திருத்தலங்களின் முக்கியத்துவங்கள் பற்றிய குறிப்புக்கள் மாதந்தோறும் மலங்கரை விளக்கில் வெளியிடப்படுகிறது.

நேரம் கிடைக்கின்ற போது தமிழ் மொழியில் மலங்கரை கருத்துக்களோடு இணைந்த மறையுரைகளை தயாரித்து சக அன்பர்களுக்கு ஆர்வத்தோடும் கொடுப்பதை மகிழ்வுடன் PDF வடிவில் பகிர்வதை வழக்கமாக்கிக் கொண்டேன். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மறையுரைகள் இணைத்து நூலாக வெளியிட வேண்டும் என திட்டமிட்டு கடந்தமாதம் முதல் அதனுடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை மூன்று தொகுப்புகளாக வெளியிடுகிறேன். 1. திருச்சபையில் கொண்டாடுகின்ற மரியாவின் ஒருசில திருநாள்கள். 2ü திருவழிபாட்டு நாள்காட்டியில் அடங்கியுள்ள ஒரு சில விழாக்களின் வரலாற்று பின்னணிகள். 3. என் தேடலில் நான் கண்டடைந்த திருச்சபை சார்ந்த பல்வேறு கருத்துத் தொகுப்புகள். இந்நூலில் உள்ள அனைத்தும் திருச்சபையைச் சார்ந்த என் தேடல்கள் ஆகும்.

திருச்சபைக்காக பல்வேறு பணிகளை செய்வதற்கான ஆர்வம் இருப்பினும் நேரமோ மிகக் குறைவு. மேலும் பல்வேறு தடைகளும், தனிமையும், மன உளைச்சல்களும், பங்கில் வேலைப்பளுவும் மிகுந்த சிரமத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மத்தியில் இறைவன் என்னை திருச்சபையின் எழுத்துப் பணிக்காக கருவியாக்கி கொண்டார் என்பதனால் இறைவனுக்கு நன்றி சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். வருகின்ற ஆண்டுகளில் இத்தகைய பல்வேறு படைப்புகளை வெளியிடுவதற்கு ஆர்வத்தோடு காத்திருக்கிறேன். என் எழுத்துப் பணியை தொடர்ந்து செய்வதற்கு முயல்வேன். இறையருள் என்னிடம் உண்டு என்பதில் மகிழ்கிறேன்.
இறைவா உமக்கு நன்றி.

Fr. Maria John